**கவனிக்க.**- 2014.04.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1913 - 2015 අප්‍රේල් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.04.30

1913 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 554 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 554 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 552 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் மற்றும் அரசியலமைப்புக்கான இருபத்துமூன்றாவது திருத்தச் சட்டமூலம் ஆகியன 2015, மாச்சு 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மே மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2015/2016

*(2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரை)*

*2015 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2016 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள 12 மாத காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரியபடிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக கற்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு :*

*"................. ஆம் இலக்கமுள்ள ................. கள்ளுத்தவறணைக்குரிய கேள்வி"*

*எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 2015.05.18 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு கற்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவனவாக இடுதல் வேண்டும்.*

*5. 2015.05.18 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுதல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் இச்செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும். குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2015.06.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இடம்பெறும்.*

*இது தொடர்பான மேலதிக விபரங்களை கற்பிட்டி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.*

*கே. பீ. ரங்கன பிரனாந்து,*
*பிரதேச செயலாளர்,*
*கற்பிட்டி.*

*பிரதேச செயலகம்,*
*கற்பிட்டி,*
*2015, ஏப்பிறல் 16.*

**அட்டவணை**

| இல. | பிரிவு | எல்லை | தவறணை | கேள்விப்பத்திர முடிவுத் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | கற்பிட்டி | தளுவை | கள்ளு | 2015.05.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு | 1,000 0 |
| 2 | கற்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | 2015.05.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு | 1,000 0 |

*5-893*

---

## மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவு ஆறுமுகத்தான் குடியிருப்பு கள்ளுத்தவறணைக்கான குத்தகை விற்பனை (2015 யூலை 1- 2016 யூன் 30)

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்கமுடைய 1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பற்று-செங்கலடி பிரதேசத்திற்குட்பட்ட ஆறுமுகத்தான்குடியிருப்பு கள்ளுத்தவறணைக்கான 2015, யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2016, யூன் மாதம் 30 ஆந் திகதி*

வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் ஏறாவூர்ப்பற்று-செங்கலடி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபை கூட்டத்திற்கு சமுகம் அளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ரூபா ஆயிரத்து ஐநூறு (ரூ. 1,500) பணத்தை ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும் போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2015.05.12 ஆந் திகதி தொடங்கி 2015.05.22 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % த்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதி சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் அவை நிராகரிக்கப்படும்.

4.கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவுசெய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத்தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும், சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்று நிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்)

7. ஏனைய விபரங்கள் ஏறாவூர்ப்பற்று-செங்கலடி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

யூ. உதயஸ்ரீதர்,
பிரதேச செயலாளர்,
ஏறாவூர்ப்பற்று-செங்கலடி.

பிரதேச செயலகம்,
ஏறாவூர்ப்பற்று- செங்கலடி,
2015, ஏப்பிறல் 10.

**கள்ளுத்தவறணை அமைய வேண்டிய இடம்**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் /நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| ஆறுமுகத்தான் குடியிருப்பு | TT No: 1 | 29.05.2015 | மு.ப 10.00 மணி |

**குறிப்பு**:

1. கேள்விச் சபை 2015.05.29 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்குக் கூடும்.

2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2015.06.12 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு நடைபெறும்.

4-884

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

டிக்கோயா, காசெல்றேய் வீதி, 252/6 ஆம் இலக்க பெத்தனியை வசிப்பிடமாகக் கொண்ட சுபமணி என்ஜல்ஹாட் மாசிலாமணி ஆகிய நான், இத்தால் இலங்கை அரசாங்கத்துக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறியத்தருவது யாதெனில், நுவரெலியா பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். ஆர். ராமராஜா அவர்களால் 1973 ஆம் இலக்கம் கொண்டதும் 2010.03.12 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் ஹட்டன், நிக்கெலெஸ் மாவத்தை, இல. 3, ஹாவெஸ்ட் விஷன் மினிஸ்டிறீஸ் பணிப்பாளர் வணக்கத்துக்குரிய எமெலி எம். அதிசயராஜ் அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழித்து விடுகிறேன்.

சுபமணி என்ஜல்ஹாட் மாசிலாமணி.

4-871

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

புத்தளம், ரத்மல்யாய, கொழும்பு வீதி, இல. 504 ஐச் சேர்ந்த வாப்பு மொஹம்மட் எஹியான் ஆகிய நான், கொழும்பு 10, மாளிகாவத்தை, ஜும்மா மஸ்ஜித் வீதி, இல. 415/95 ஐச் சேர்ந்த மொஹம்மட் எஹியான் யசார் அஸ்மத் என்பவருக்கு கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். நீலாமுதீன் என்பவரினால் 1708 ஆம் இலக்க 2013.08.21 ஆந் திகதியிடப்பட்டதும் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் கொழும்பு உப பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் 2013.08.30 ஆந் திகதி, தொகுதி 8, பக்கம் 13 இல் 2616 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் என்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவக்காரரினால் எனது சார்பில் செய்யப்படும் எந்தச் செயலுக்கும் நான் பொறுப்பெடுக்க மாட்டேன் என்றும் அத்தகைய செயல்கள் எதனையும் நான் ஏற்றங்கீகரிக்க மாட்டேன் என்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.

வாப்பு மொஹம்மட் எஹியான்.

4-873

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மஹோ ஆஸ்பத்திரி சந்தியில் வசித்த தற்போது மாஹோ கந்துபடகம, இல. 90 எனும் முகவரியில் வசிக்கும் 767723067V ஆம் இலக்க தேசிய ஆள் அடையாள அட்டையின் உரித்தாளியான கம்மெத்தே ஹேரத் முதியன்சேலாகே சமிலா யசன்தி ஹேரத் ஆகிய நான், மஹோ ஆஸ்பத்திரி சந்தி என்ற முகவரியில் வசிக்கும் கம்மெத்தே ஹேரத் முதியன்சேலாகே சோமசந்திர என்பவருக்கு வழங்கியுள்ள பிரசித்த நொத்தாரிசு திரு. ஜினதாஸ லேகம்கே அவர்களால் 2000.08.07 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணி தத்துவப்பத்திரத்தை 2015.03.27 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்கின்றேன்.

ஜீ. எச். எம். சமிலா யசன்தி ஹேரத்.

4-895

---

# ஏல விற்பனைகள்

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையின் பல்லேபத்துவில் தெகிவளை, மவுண்ட்லவினியா மாநரசபை எல்லைக்குள் ஸ்ரீசரணங்கர 6 ஆவது இலக்க வட்டாரத்துக்குள் களுபோவிலவில் ஹத்போதிய வீதியில் அமைந்துள்ள 174 என்ற தற்போதைய மதிப்பீட்டு இலக்கத்தையுடைய நிக்கூரான சூரியவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ரீ. சில்வாவால் தயாரிக்கப்பட்ட 1991, ஏப்பிறல் 1 ஆந் திகதியிடப்பட்ட 665 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு ஏ எனக் குறிக்கப்பட்ட (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. அபேரத்னவால் தயாரிக்கப்பட்ட 1972, யூலை 16 ஆந் திகதி மற்றும் 23 ஆந் திகதிகளிடப்பட்ட 310 ஆம் இலக்க கூறப்பட்ட படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டுகள் 2 மற்றும் 3 ஆகியவற்றின் ஒன்றிணைப்பாக உள்ள காணியின் உட்பிரிவாகவும் மீள் அளவையாகவும் உள்ள அனைத்து பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப் பட்ட காணிப்பகுதி. இது கூறப்பட்ட 665 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்துக்கு ஏற்ப பரப்பளவில் ஒன்பது தசம் ஒன்று சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 9.10பே.) அல்லது சைபர் தசம் சைபர் இரண்டு மூன்று சைபர் ஹெக்டெயர் (0.0230 ஹெக்.) உடையதும் மவுண்ட்லவினியா காணிப்பதிவு அலுவலகத்தில் எம்1855/117 இன்கீழ் பதிவுசெய்யப் பட்டதுமாகும்.

மேலும் கீழ்க்காணும் காணித்துண்டுகளுக்கு மேலாகவும் வழியாகவும் கீழாகவும் அமைந்த நடைபாதை மற்றும் வாகனப் போக்கு வரத்துக்காகவும் பிரதான வடிகால் குழாய்கள் மற்றும் நீர்க்குழாய் களுக்கு மேலாக மின்சார கேபிள்களைப் போடுவதற்காகவும் உள்ள முழுமையான சுயாதீனமான உரிமையையும் மற்றும் பாதைக்கான அனுமதிப்பத்திரத்தையும் உடைய பொதுவான உரிமைகளுடன் அவை போன்ற ஏனைய உரிமைகளையும் உடையதாகும்.

முன்சொல்லப்பட்ட நிக்கூரண சூரியவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ரீ. சில்வாவால் தயாரிக்கப்பட்ட 1991, ஏப்பிறல் 1 ஆந் திகதியிடப்பட்ட 665 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு சி எனக் குறிக்கப்பட்டதும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. அபேரத்னவால் தயாரிக்கப்பட்ட 1972, யூலை 16 ஆந் திகதி மற்றும் 23 ஆந் திகதியிடப்பட்ட கூறப்பட்ட 310 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டுகள் 2 மற்றும் 3 ஆகியவற்றின் ஒன்றிணைப்பின் உப பிரிவாகவும் மீள் அளவையாகவும் உள்ளது) கூறப்பட்ட 665 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்திற் கேற்ப பரப்பளவில் ஒன்று தசம் ஆறு இரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 1.62பே.) அல்லது சைபர் தசம் சைபர் சைபர் நான்கு ஒன்று ஹெக்டெயர் (0.0041 ஹெக்.) உடையதும் மவுண்ட்லவினியா காணிப்பதிவு அலுவலகத்தில் எம்1855/119 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான அனைத்தும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி. மேற்கூறப்பட்ட களுபோவில மேற்கில் அமைந்துள்ள நிக்கூரண சூரியவத்த எனக் கூறப்பட்ட காணியிலிருந்து வெளியேயும் கூறப்பட்ட 1885 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு ஏ1 (பாதைக்கான ஒதுக்கீடு) எனக் குறித்துக் காட்டப்பட்டதும் கூறப்பட்ட

1885 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்துக்கு ஏற்ப பரப்பளவில் முப்பத்திரண்டு தசம் ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 32.5பே.) உடையதும் மவுண்ட் லவினியா காணிப்பதிவு அலுவலகத்தில் எம்925/202 இன்கீழ் பதிவுசெய்யப் பட்டதுமான அனைத்துப் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி.

**இரண்டாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையின் பல்லேபத்துவில் தெகிவளை-மவுண்ட்லவினியா மாநகர சபை எல்லைக்குள் ஸ்ரீ சரணங்கர 6 ஆவது வட்டாரத்தில் களுபோவிலவில் ஹத்போதிய வீதியில் அமைந்துள்ள 17/4ஏ மற்றும் 17/4ஏ 1/1 ஆம் மதிப்பீட்டு இலக்கங்களை உடையதும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்ந்ததும் நிக்கூரண சூரியவத்த எனக் கூறப்படுவதுமான காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ரீ. சில்வாவால் தயாரிக்கப்பட்ட 1991.04.01 ஆந் திகதியிடப்பட்ட 665 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு பி எனக் குறித்துக்காட்டப்பட்ட அனைத்தும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி.

இது கூறப்பட்ட 665 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்திற்கேற்ப பரப்பளவில் பதினொரு பேர்ச் (0ஏ. 0றூ. 11பே.) உடையதும் மவுண்லவினியா தெல்கந்த நுகேகொட காணிப்பதிவு அலுவலகத்தில் எம்1855/301 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் கீழே மேலும் விபரிக்கப்பட்டவாறு பாதைக்கான ஒதுக்கீட்டின் உள்ளாகவும் மேலாகவும் வழியாகவும் அமையும் பாதைக்கான உரிமையுடன் சேர்ந்ததும் ஆகும்.

மேற்கூறப்பட்ட களுபோவில மேற்கில் அமைந்துள்ள நிக்கூரண சூரியவத்த எனக் கூறப்படும் காணியிலிருந்தும் வெளியாகவும் உள்ளவாறு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ரி. சில்வாவால் தயாரிக்கப்பட்ட 1991.04.01 ஆந் திகதியிடப்பட்ட 1885 ஆம் இலக்க கூறப்பட்ட படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு அ1 (பாதைக்கான ஒதுக்கீடு) எனக் குறிக்கப்பட்டதும் கூறப்பட்ட 1885 ஆம் படவரைபுத் திட்டத்திற்கேற்ப பரப்பளவில் முப்பத்திரண்டு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 32.5பே.) உடையதும் மவுண்ட்லவினியா காணிப்பதிவு அலுவலகத்தில் எம்925/202 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான அனைத்தும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி. மேற்கூறப்பட்ட நிக்கூரண சூரியவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ரீ. சில்வாவால் தயாரிக்கப்பட்ட 1991, ஏப்பிறல் 1 ஆந் திகதியிடப்பட்ட 666 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு சி எனக் குறிக்கப்பட்டதும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் அ. அரியநேத்திரனால் தயாரிக்கப் பட்ட 1972, யூலை 16 ஆந் திகதி மற்றும் 23 ஆந் திகதி யிடப்பட்ட கூறப்பட்ட 310 ஆம் படவரைபுத் திட்டத்தில் காணித் துண்டுகள் 2 மற்றும் 3 ஆகியவற்றின் ஒன்றிணைப்பின் உப பிரிவாகவும் மீள் அளவையாகவும் உள்ளது.) இது கூறப்பட்ட 665 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்துக்கு ஏற்ப பரப்பளவில் ஒன்று தசம் ஆறு இரண்டு பேர்ச் அல்லது சைபர் தசம் சைபர் சைபர் நான்கு ஒன்று ஹெக்டெயர் களை (0.0041 ஹெக்.) உடையதும் மவுண்ட்லவினியா காணிப்பதிவு அலுவலகத்தில் எம்1855/119 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமாகும். கொழும்பு பிரசித்த நொத்தாரிசு நிரோதா சுபேக்ஷாலி கலன்சூரியவால் உறுதிப்படுத்தப் பட்ட 2009, மே 29 ஆந் திகதியிடப்பட்ட 1107 ஆம் இலக்க ஈட்டுமுறி மற்றும் 2009, மே 29 ஆந் திகதியிடப்பட்ட 1108 ஆம் இலக்க ஈட்டுமுறி ஆகிய இரண்டு ஈட்டுமுறிகளுக்கும் ஏற்ப அனுஜா செனரத் பண்டார ரதெல்ல மற்றும் டொன் நிரோஷினி கீர்த்தி சந்திர ரதெல்ல ஆகிய இருவரும் ஈடுவைப்பாளர்கள் மற்றும் கடப்பாடு உடையவர்களாக அதிலுள்ள அட்டவணையில் கூடுதலாக விபரிக்கப்பட்ட உரிமைகள் ஆதனம் மற்றும் வளவுகளை இல. 243, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 எனும் முகவரியிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பீஎல்சீயின் பெயரில் கூறப்பட்ட அனுஜா செனரத் பண்டார ரதெல்ல மற்றும் நிரோஷினி கீர்த்திசந்திர ரதெல்ல ஆகியோர் பெற்றுக்கொண்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்கான பிணையாக ஈடுவைத்து ஒப்படைத்துள்ள துடன் கூறப்பட்ட இந்தக் கடன் பட்டோர்கள் கூறப்பட்ட ஈட்டுமுறி மூலம் வழங்கப்பட்ட வசதிகளுக்காக மீள்கொடுப்பனவைத் தவறவிட்டுள்ள னர்.

கூறப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கேற்ப மேற்கூறப்பட்ட ஆதனத்தை அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யவுள்ளோம்.

ஏல விற்பனை 2015, மே 22 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கொழும்பிலிருந்து புறப்பட்டு காலி வீதி வழியாக சுமார் 8 கிலோ மீற்றர்கள் (தெகிவளையிலுள்ள பாலத்தைக் கடந்து) பயணம் செய்து இடதுபக்கமாக ஆஸ்பத்திரி வீதிக்குத் (கொட்டகம ஸ்ரீ வச்சிஸர மாவத்தை) திரும்பி அதில் சுமார் 750 மீற்றர்கள் சென்று இடதுபக்கமாக ஹத்போதிய வீதிக்குத் திரும்பி அதில் சுமார் 460 மீற்றர்கள் சென்று இறுதியில் வலது பக்கமாக கிரவல் பாதையில் சுமார் 125 மீற்றர்கள் சென்று அந்தப் பாதையின் முடிவில் அமைந்துள்ள இந்த சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு முறை.**- கொள்வனவு முயற்சியில் வெற்றிபெறுபவர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து (10%) சதவீதம் ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் 100% ;
(5) இலிகிதர், முரசறைவோர் கூலியாக ரூபா 1,000 ;
(6) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி 90 வீதமும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும் :

நுகர்வோர் சட்டப் பிரிவு, நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 256, ஸ்ரீமத் ராமநாதன் மாவத்தை, கொழும்பு 15, தொலைபேசி இல. 0773918733.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்றொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 077-3181891.

4-888

### நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் கிழக்கு கங்கொட பத்துவில் கறந்தெனிய பிரதேச சபை எல்லைக்குள் வெலிவிட்டிய திவிதுற பிரதேச செயலாளர் அதிகாரப் பிரிவில் 193 ஆம் இலக்க, பி. மத்தேவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் திவிதுறவில் அமைந்துள்ள கொஸ்கஹபெத்த என்ற பெயருள்ள காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். பி. ஆர். ஆனந்தவால் அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 803 ஆம் இலக்க மற்றும் 2006, மே மாதம் 15 ஆந் திகதியுடைய படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு இல. ஏ எனக் குறித்துக்காட்டப்பட்ட அனைத்தும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி பரப்பளவு (0ஏ. 2றூ. 30பே.) இரண்டு றூட் மற்றும் முப்பது பேர்ச் அத்துடன் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடன் சேர்ந்தது. எல்பிட்டிய காணிப்பதிவு அலுவலகத்தில் பீ/ 10/ 102 இல் பதிவுசெய்யப்பட்டது. மேலும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. கர்வினால் தயாரிக்கப்பட்ட 1983, யூன் 6 மற்றும் 8 ஆந் திகதிகளுடைய 2697 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 3 இலும் அதன் மேலாகவும் வழியாகவும் உள்ள பாதைக்கான உரிமையுடன் சேர்ந்தது.

பிரசித்த நொத்தாரிசு றோமனி தலவத்தவால் உறுதிப்படுத்தப்பட்ட 285 ஆம் இலக்க மற்றும் 2013, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி மூலம் இதிலுள்ள மேற்படி அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்ட உரிமைகள், ஆதனங்கள் மற்றும் வளவுகளை முணுகொட ஹேவகே தர்சன என். சந்திரசிறி ஈடுவைப்பாளராக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 இல் அமைந்துள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ இன் பெயருக்கு ஈடுவைத்து பிணையாகக் கொடுத்துள்ள ஈட்டுமுறி மூலம் பெற்றுக்கொண்ட வசதிகளுக்காகக் கொடுக்கவேண்டிய கொடுப்பனவை முணுகொட ஹேவகே தர்சன என். சந்திரசிறி கடன் பெற்றவர் என்ற வகையில் கொடுக்கத் தவறியுள்ளார். நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யால் எமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துக்கேற்ப 2015, மே மாதம் 22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சம்பந்தப்பட்ட ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் எங்களால் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.

**ஆதனத்தை வந்தடைதல்.-** அம்பலாங்கொட-அல்பிட்டிய வீதியிலிருந்து குறுந்துகஹஹதப்ம பஸார் நோக்கி பயணம் செய்து வலது பக்கமுள்ள பட்டபொல வீதிக்குத் (காலி-அல்பிட்டிய வீதி) திரும்பவும் முன்கூறப்பட்ட பஸார் தெற்கு அதிவேக சாலைக்கு அண்மையில் சுமார் 250 மீற்றர்கள் முன்பாக அமைந்துள்ளது. பின் அங்கிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள யக்கடுவ சந்திவரை பயணம் செய்து இடதுபக்கமுள்ள மாபலகம வீதிக்குத் திரும்பி மீண்டும் மேலும் 3 கிலோ மீற்றர்கள் பயணம் செய்து அத்கந்துர சந்தியை அடையவும். பின்னர் அங்கிருந்து வலது பக்கமுள்ள அம்பேகம-பத்தேகம வீதிக்குத் திரும்பவும். அந்த வீதியில் சுமார் 2 கிலோ மீற்றர்கள் பயணம் செய்து அதன் முடிவில் வலது பக்கமுள்ள குரு வீதியில் சுமார் 150 மீற்றர்கள் சென்று அங்கு அமைந்துள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு முறை.-** கொள்வனவு முயற்சியில் வெற்றிபெறுபவர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவு செய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து (10%) சதவீதம் ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் (100%) ;
(5) இலிகிதர், முரசறைவோர் கூலியாக ரூபா 1,000 ;
(6) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் ரூபா 2,000.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி 90 வீதமும் நேஷன் ட்ரஸ்ட் பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 46/58, நவம் மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி இல. 011-4218746.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 077-3181891.

4-889

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 73570041

திருவாளர்கள் சிறிகோதிய ரேஸ்ட் பூட் சென்ரர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.03.06 ஆந் திகதிய 1905 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.02.18 ஆந் திகதி புதன்கிழமைய ''டெய்லி நியூஸ்'', ''தினகரன்'', ''தினமின'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு

மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2015.05.23 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், கடுவல பிரதேச செயலகப் பிரிவில் கடுவல மாநகர சபை எல்லைகளுள் ஹேவகம் கோரளை, பல்லேபற்றுவில், ஆசிரி உயனபெலவத்த, இல.479/B, கிராம உத்தியோகத்தர் பிரிவில் தலங்கம- தெற்கு கிராமத்தில் அமைந்த ஆசிரி உயன, முதலாவது ஒழுங்கை, வரிமதிப்பிலக்கம்59 ஐக், கொண்ட மசூன் எஸ்டேட்,(எனினும் மில்லகஹவத்த மசூன் எஸ்டேட் எனப் பதிந்ததும்) என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் I.A.C. சேனாரத்ன தயாரித்த 1990 ,மே 05 ஆந் திகதியிட்ட வரைபடம் இல.2972 இல் விபரித்த துண்டு 6A, என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : வரை படம் இல. 1786 இல் துண்டு 7 உம் கிழக்கு : E.O.D. பொன்சேகாவின் காணியும்; தெற்கு : துண்டு 6 B உம்; மேற்கு : வரைபடம் இல. 1786 இல் துண்டு A உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1786 இன்படி பத்து பேர்ச்சு (0ஏ.0றூ. 10.பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் B 206/ 30 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு தலங்கம கிராமத்தில் அமைந்த “மசூன் எஸ்டேற்றின் பாகம்” என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி.ஜே. திடிமன் தயாரித்த 1953, மே 30 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 8539 இல் விபரித்த துண்டு 20 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு: வரைபடம் இல. 8539 இல் துண்டு 35 உம் ; கிழக்கு : வரைபடம் இல. 8539 இல் துண்டுகள் 13, 12,11, மற்றும் 10 உம்; தெற்கு : பொரளையில் இருந்து பன்னிப்பிட்டிய வரை P.W.D. வீதியும்; மேற்கு : வரைபடம் இல. 8539 இல் துண்டுகள் 14 மற்றும் 15 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 85392 இன்படி பதினேழு தசம் ஆறு சைபர் பேர்ச்சு (0ஏ.0றூ. 17.60பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 521/ 266 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு தலங்கம கிராமத்தில் அமைந்த “மசூன் வத்த” என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் V.A.L. சேனாரத்ன தயாரித்த 1960, யூன் 01 ஆம் திகதியிடப்பட்ட மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.1786 இல் விபரித்த துண்டு A (பாதைக்காக ஒதுக்கப்பட்ட) என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : துண்டுகள் 23 மற்றும் 10 உம்; கிழக்கு: E.O.de பொன்சேகா உரிமை கோரும் காணித் துண்டுகள் 4, 9 உம்; தெற்கு: துண்டுகள் 20,13,35 மற்றும் 5A உம்; மேற்கு: துண்டு 19 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.85392 இன் படி 1 றூட் இருபத்தொன்று தசம் ஒன்பது மூன்று பேர்ச்சு (0ஏ. 1றூ. 21.93பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் G 594/ 271 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) எஸ். எஸ். விஜேகோன்,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மாலபே கிளை,
2015, ஏப்பிறல் 01.

4-875

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 72982566

திருவாளர்கள் பீ. எஸ். பற்றன் காமன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.03.06 ஆந் திகதிய 1905 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.02.18 ஆந் திகதி புதன்கிழமைய “டெய்லி நியூஸ்”, “தினகரன்”, “தினமின” ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2015.05.16 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை பல்லேபற்றுவில் பொது அரவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடுவல பிரதேச செயலாளர் பிரிவில் கடுவல மாநகர சபை எல்லைகளுள் தலங்கம வடக்கில் அமைந்த “கொஸ்கஹவத்த” என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் M.L.N. பெரேரா தயாரித்த 2008 நவெம்பர் 24 ஆந் திகதியிட்ட வரைபடம் இல.4949 இல் துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : வரைபடம் இல. 944 இல் துண்டு C உம் 4.5 மீற்றர் அகலமான பாதையும்; கிழக்கில் : வரைபடம் இல. 944 இல் துண்டு C யும் (4.5 மீற்றர் அகலமான பாதையும்) வரைபடம் இல. 3412 துண்டு A 1 உம் ; தெற்கு:

வரைபடம் இல. 3412 இல் துண்டு A1 உம் வரைபடம் இல.4791 இல் துண்டு 4 உம்; மேற்கு : வரைபடம் இல. 4791 இல் துண்டு 4 உம் , 4.5 மீற்றர் அகலமான பாதையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4949 இன்படி இருபத்தாறு பேர்ச்சு (0ஏ.0றூ. 26.பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள் , மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் B 02/88 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) எஸ். எஸ். விஜேகோன்,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மாலபே கிளை,
2015, ஏப்பிறல் 01.

4-876

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.